## சட்டப்பேரவைத் தேர்தல்

## 2016

## மாவட்டங்களுக்கான திட்டங்கள்

# தி.மு.க. தேர்தல் அறிக்கை

# சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2016

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர்

1. டி.ஆர்.பாலு – ஒருங்கிணைப்பாளர்
2. கனிமொழி, எம்.பி.,
3. வி.பி.துரைசாமி
4. சுப்புலட்சுமி ஜெகதீசன்
5. டி.கே.எஸ். இளங்கோவன்
6. பேராசிரியர் அ.இராமசாமி
7. ஆர்.சண்முகசுந்தரம்
8. என்.ஆர்.இளங்கோ
9. தங்கம் தென்னரசு

# தி.மு.க. தேர்தல் அறிக்கை – 2016

## மாவட்டங்கள்


| | | |
|---|---|---|
| 1. | அரியலூர் | 7 |
| 2. | இராமநாதபுரம் | 8 |
| 3. | ஈரோடு | 9 |
| 4. | கடலூர் | 11 |
| 5. | கரூர் | 12 |
| 6. | கன்னியாகுமரி | 13 |
| 7. | காஞ்சிபுரம் | 14 |
| 8. | கிருஷ்ணகிரி | 17 |
| 9. | கோயம்புத்தூர் | 20 |
| 10. | சிவகங்கை | 23 |
| 11. | சென்னை | 23 |
| 12. | சேலம் | 25 |
| 13. | தஞ்சாவூர் | 28 |
| 14. | தருமபுரி | 30 |
| 15. | திண்டுக்கல் | 32 |
| 16. | திருச்சிராப்பள்ளி | 35 |
| 17. | திருநெல்வேலி | 36 |

| | | |
|---|---|---|
| 18. | திருவண்ணாமலை | 39 |
| 19. | திருப்பூர் | 41 |
| 20. | திருவள்ளூர் | 43 |
| 21. | திருவாரூர் | 45 |
| 22. | தூத்துக்குடி | 46 |
| 23. | தேனி | 47 |
| 24. | நாகப்பட்டினம் | 49 |
| 25. | நாமக்கல் | 50 |
| 26. | நீலகிரி | 51 |
| 27. | புதுக்கோட்டை | 52 |
| 28. | பெரம்பலூர் | 53 |
| 29. | மதுரை | 54 |
| 30. | விருதுநகர் | 58 |
| 31. | விழுப்புரம் | 59 |
| 32. | வேலூர் | 62 |

## அரியலூர் மாவட்டம்.

1. ஜெயங்கொண்டத்தில் முந்திரி ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கப்படும்.
2. முந்திரிப் பழங்கள் வீணாவதைத் தடுக்க, முந்திரிப் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை செந்துறையில் தொடங்கப்படும்.
3. ஜெயங்கொண்டம் அனல்மின் நிலைய நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சி எடுக்கப்படும்.
4. அரியலூரில் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும்.
5. அரியலூரில் உள்ள அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.
6. அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.
7. ஆண்டிமடம் தனி வருவாய் வட்டமாகத் தரம் உயர்த்தப்படும்.
8. செந்துறை ஒன்றியத்தில் முந்தைய கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் சீரமைக்கப்பட்டு, மக்களுக்குத் தரமான குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படும்.
9. நதியனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும்.
10. அரியலூர் மாவட்டத்தில் அரசு மகளிர் கல்லூரியும் , அரசு மாணவர் விடுதியும் கட்டித்தரப்படும்.
11. அரியலூர் மாவட்டத்தில் ஆணை வாரி நீர்த்தேக்கம் அமைத்துத் தரப்படும்.
12. அரியலூர் மாவட்டத்தில் பொன்னேரி பகுதியில் மீத்தேன் வாயு எடுப்பது தடுத்து நிறுத்தப்படும்.
13. அரியலூர் ரயில்வே கேட்டிற்கு ஒரு மேம்பாலம் அமைத்துத் தரப்படும்.

14. செந்துறை – கோட்டைக்காடு சாலையிலுள்ள வெள்ளாற்றில் மேம்பாலம் அமைத்துத் தரப்படும்.

15. செந்துறையில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைத்துத் தரப்படும்.

16. முந்திரி விவசாயிகளுக்கு மானிய விலையில் வீரிய ரக ஒட்டுக் கன்றுகள் மற்றும் உரங்கள் வழங்கப்படும்.

## இராமநாதபுரம் மாவட்டம்.

1. தனுஷ்கோடி – புதுரோடு தென்கடல் பகுதியில் கல்தூண்டி வளைவு அமைக்கப்படும்.

2. நடராஜபுரம் இராமகிருஷ்ணாபுரம் புதுரோடு கரையூர் பகுதி ஏழை மீனவர்களுக்குப் பயன்படும் வகையில் சமூகக் கூடங்கள் கட்டித்தரப்படும்.

3. பார்த்திபனூர் மதகு அணைக்குக் கீழ் வைகை இடது மற்றும் வலது கால்வாய்கள் சிமெண்ட் தளம் அமைத்துச் செப்பனிடப்படும்.

4. இராமநாதபுரத்திலும் பரமக்குடியிலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

5. இராமநாதபுரம் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை மற்றும் இராமநாதபுரம் – தூத்துக்குடி சாலை ஆகியன நான்கு வழிச்சாலைகளாக மாற்றப்படும்.

6. கமுதி அருகே மலட்டாற்றில் அணை கட்டப்படும்.

7. முதுகுளத்தூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைக்கப்படும்.

8. முதுகுளத்தூர் – சாயல்குடி சாலையில் முதுகுளத்தூர் பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

9. சிக்கல் பகுதியைச் சுற்றி 50 கிராமங்கள் உள்ளதால் சிக்கலில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

10. முதுகுளத்தூர் தொகுதியில் உழவர் சந்தை அமைக்கப்படும்.

11. ஏர்வாடியில் அரசு மனநலக் காப்பகம் அமைக்கப்படும்.

12. கீழக்கரை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

13. தொண்டியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்படும்.

14. தேவிப்பட்டினம் சுற்றுலா தலம் மேம்படுத்தப்படும்.

## ஈரோடு மாவட்டம்

1. பெருந்துறையில் சாயக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

2. கோவை, சேலம் புறவழிச்சாலையில் பெருந்துறை அருகில் மூன்று மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

3. மேட்டூர் அணையின் உபரி நீர் சென்னம்பட்டி அந்தியூர் வரட்டுப்பள்ளம் வழியாக ஆப்பக்கூடல் வரை உள்ள ஏரிகளில் சேமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

4. “தாராபுரம் கட்” பூமிகளுக்குப் பாசன வசதி செய்து தரப்படும்.

5. காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் கீழ்பாவனி பாசன கால்வாய்கலுக்கு கான்கீரிட் லையனிங் செய்து சீரமைக்கப்படும்.

6. சாய ஆலைகள், தோல் ஆலைகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீர் காலிங்கராயன் வாயக்காலில் கலக்காமல் சுத்திகரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

7. ஈரோடு பெருமாள் மலை அடிவாரத்தில் குடியிருந்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8. ஈரோடு நகரில் ஒருங்கிணைந்த வேளாண் வணிக வளாகம் அமைக்கப்படும்.

9. தாளவாடியில் மூலிகைப் பூங்கா அமைக்கப்படும்.

10. ஈரோடு நகரிலும், கோபியிலும் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

11. ஈரோடு நகரில் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை, ரயில் நிலையம் ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்படும.

12. ஈரோடு மாவட்டத்தில் உள்ள குரங்கன் பள்ளப் பாசன நிலங்கள் கழக ஆட்சியில் அறிவித்தபடி கீழ்பவானி பாசனத்திட்டத்துடன் இணைக்கப்படும்.

13. ஈரோடு மாநகரத்தின் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற ஊராட்சிக் கோட்டைக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

14. ஈரோட்டில் அமைந்துள்ள சுற்றுவட்டப் பாதையில் லக்காபுரம் பரிசல்துறை அருகில் ரயில்வே மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

15. கொடுமுடி அருகே அறிவுடையார் பாறை – பிலிக்கல் பாளையம் வழியாகக் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படும்.

16. ஈரோடு மாவட்டம் பாசூர் ரயில் பாதையில் மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. ஈரோடு மாநகரத்தில் அழகரசன் நகர், பெரியார் நகர், புதுமைக்காலனி ஆகிய பகுதிகளில் இடிக்கப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

18. கோபி நகர மக்களுக்குத் தினமும் குடிதண்ணீர் வழங்கும் வகையில் புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

19. தாளவாடி மலைப்பகுதியில் மலைவாழ் மக்களால் விளைவிக்கப்படும் காய்கனிகள் மற்றும் இதர பொருட்களைச் சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

20. அந்தியூர் ஒன்றியத்தில் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

21. ஈரோடு மாவட்டம் பவானி நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சுற்று வட்டப்பாதை அமைக்கப்படும்.

22. மணியாச்சி, வரட்டுப்பள்ளம், வழுக்குப்பாறை ஆகிய ஆறுகளை இணைத்து அந்தியூர் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

23. தற்போது ஈரோட்டில் மஞ்சள் ஏலம் ஐந்து இடங்களில் நடைபெறுகிறது. இதனால், விலை வேறுபாடுகளும் பாதிப்புகளும் உள்ளதாகப் புகார்கள் வருகின்றன. மஞ்சள் வியாபாரிகளுடன் கலந்து பேசி, கேரளா போன்ற மற்ற இடங்களில் இருப்பது போல் மஞ்சள் ஏலம் ஈரோட்டில் ஒரே இடத்தில் நடைபெற வசதியாக ஈரோடு நகரில் ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகம் அமைக்கப்பட்டு, மஞ்சள் விவசாயிகளின் இலாபம் அதிகரிக்கத் தேவைப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

24. வேதபாறை நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படும்.

25. அந்தியூர் அருகே பட்லூரில் புதிய அணை கட்டப்படும்.

26. அந்தியூரில் அரசு சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்படும்.

## கடலூர் மாவட்டம்

1. திட்டக்குடி நகரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

2. திட்டக்குடி நகராட்சியாக ஆக்கப்படும்.

3. திட்டக்குடி வட்டத்தில் பாக்கம்பாடி அணையை உயர்த்தி, அதிக அளவில் நீரைத் தேக்கி மங்கலூர் ஒன்றியத்தில் 60 கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரப்படும்.

4. கடலூார் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஒன்றியம் கிள்ளை பேரூராட்சியில் உள்ள சின்னவாய்க்கால் முகத்துவாரம் தூர்ந்துபோவதைத் தடுக்க (Sheet Piles) இரும்புத் தகடு சுவர் அமைத்துப் பாதுகாக்கப்படும்.

5. கள்ளப்பாடி – காவனூர் இடையே வெள்ளாற்றில் பாலம் அமைக்கப்படும்.

6. திருமுட்டம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

7. வீராணம் ஏரி சுற்றுலா மையமாக ஆக்கப்படும்.

8. விருத்தாசலம் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கப்படும்.

9. விருத்தாசலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

10. விருத்தாசலத்தில் நீச்சல் குளம் அமைத்து அரசு விளையாட்டு அரங்கம் தரம் மேம்படுத்தப்படும்.

11. கடலூார் துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. கடலூார் சிப்காட் பகுதியில் இரசாயன ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிதம்பரம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

## கரூர் மாவட்டம்

1. கரூரில் சாயக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

2. வேலாயுதம்பாளையத்தில் வெற்றிலையைச் சேமித்து வைக்கக் குளிர் பதனக் கிடங்கும், வெற்றிலை விற்பனை மண்டியும் அமைக்கப்படும்.

3. சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அனுமதி பெறாமல் இருக்கும் சாய மற்றும் சலவைப் பட்டறைகளுக்கு உடனடியாக அனுமதி வழங்கப்படும்.

4. கரூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

5. கரூரில் பழங்கள், காய்கறிகள் சேமித்து வைக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

6. அரவக்குறிச்சி அரசு மருத்துவமனை 24 மணிநேரமும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

7. கடலூர் ஒன்றியம் மயிலம்பட்டியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் அரசுப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

8. கடவூரில் மகளிர் காவல் நிலையமும் பஞ்சப்பட்டியில் ஒரு காவல் நிலையமும் தொடங்கப்படும்.

9. காவிரியில் குளித்தலை அருகே தடுப்பணை கட்டி அப்பகுதியில் நடைபெறும் மணல் மற்றும் நீர் எடுப்புப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும்.

10. அமராவதி பாசனத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும்.

11. பஞ்சப்பட்டி, தாதம்பாளையம் ஏரிகளைத் தூர்வாரி, பஞ்சப்பட்டி ஏரிக்குக் காவிரியில் இருந்தும், தாதம்பாளையம் ஏரிக்கு அமராவதியில் இருந்தும் உபரி நீரைக் கொண்டு செல்ல கால்வாய்கள் அமைக்கப்படும்.

12. உப்பிடமங்கலம், வீராக்கியம் ஏரிகள் தூர்வாரப்படும்.

## கன்னியாகுமரி மாவட்டம்

1. விளவங்கோடு – நெய்யாறு இடதுகரைக் கால்வாயைத் தூர்வாரிச் செப்பனிட்டு, கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தித் தண்ணீர் பெற முயற்சி செய்யப்படும்.

2. நாகர்கோவில் நகரில் சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

3. கன்னியாகுமரியில் அய்யா வைகுண்ட சாமி அவர்களின் மணிமண்டபமும், ஆராய்ச்சி மையமும் அமைக்கப்படும்.

4. கன்னியாகுமரி முதல் நீரோடி வரையிலான கடலோர கிராமங்களை இணைக்கும் சாலையும், தேங்காய்ப்பட்டினத்தில் இரையுமன் துறையில் ஒரு பாலமும், ராஜாக்கமங்கலத்தில் மற்றொரு பாலமும் அமைக்கப்படும்.

5. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்கப்படும்.

6. டச்சுப் படையை வென்ற அனந்த பத்மநாபன் நாடார் அவர்களுக்குத் தச்சன்விளையில் மணிமண்டபம் கட்டப்படும்.

7. நாகர்கோவில் செட்டிக்குளம் அரசுப் பேருந்துப் பணிமனை சீரமைக்கப்படும்.

8. கோட்டாறில் குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு அமைக்கப்படும்.

9. குமரி மாவட்டம் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஏ.வி.எம். கால்வாயைத் தூர்வாரி, பழங்காலத்தில் போக்குவரத்து நடைபெற்றது போல், மீண்டும் நீர்வழிப் போக்குவரத்து உருவாக்கித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## காஞ்சிபுரம் மாவட்டம்

1. திருப்பெரும்புதூரில் காய்கறிகள் சேமித்து வைப்பதற்காகக் குளிரூட்டும் வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு அமைக்கப்படும்.

2. திருப்பெரும்புதூரில் உள்ள அரசு மருத்துவமனை, 24 மணிநேர அவசர சிகிச்சைப் பிரிவுடன் தரம் உயர்த்தப்படும்.

3. திருப்பெரும்புதூர் – கோடம்பாக்கம் சாலையில் குன்றத்தூர், சிறுகளத்தூர் அருகே மேம்பாலம் அமைக்கப்படும்.

4. பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, மாடம்பாக்கம், சிட்லபாக்கம் திருநீர்மலை, குன்றத்தூர், மாங்காடு, கூடுவாஞ்சேரி, நந்திவரம் ஆகிய பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

5. மதுராந்தகத்தில் முந்தைய கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும். பாதாள சாக்கடைத் திட்டமும் நிறைவேற்றப்படும்.

6. காஞ்சிபுரத்தில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

7. தற்போது மூடப்பட்டுள்ள காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8. GST நெடுஞ்சாலையில் கூடுவாஞ்சேரி சிக்னல் அருகே நெல்லிக்குப்பம் சாலை சந்திப்பு, சென்னை – பெங்களூரு நெடுஞ்சாலையில் திருப்பெரும்புதூர் ராஜீவ்காந்தி நினைவகம் அருகே இந்திரா காந்தி சிலை சந்திப்பு, கிழக்கு கடற்கரை நெடுஞ்சாலையில் கோவளம் அருகே கேளம்பாக்கம் சந்திப்பு ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. குன்றத்தூர் அருகே அடையாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்.

10. மாமல்லபுரத்தில் 24 மணிநேரமும் செயல்படும் அவசர சிகிச்சைப் பிரிவுடன் கூடிய மருத்துவமனை அமைக்கப்படும்.

11. பெங்களூரு நெடுஞ்சாலை – காஞ்சிபுரம் திருப்பம் சந்திப்புக்குள் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

12. பரந்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

13. திருப்புட்குழி ஊராட்சி பாலுசெட்டிசத்திரத்தில் மகளிர் மேல்நிலைப்பள்ளி தொடங்கப்படும்.

14. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மேம்படுத்தப்பட்டு, சர்வதேச சுற்றுலாத் தலமாக ஆக்கப்படும். பறவைகள் ஆய்வு மையம் அமைக்கப்படும்.

15. நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் நவீன வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும்.

16. நெம்மேலியில் மீன்கள் பதப்படுத்தி சேமித்து வைப்பதற்காகக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

17. செங்கல்பட்டு நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

18. அனகாபுத்தூரில் செம்பரம்பாக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

19. அனகாபுத்தூரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

20. முந்தைய கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அனகாபுத்தூர் – தரப்பாக்கம் இடையே அடையாற்றில் மேம்பாலம் கட்டும் பணி மீண்டும் தொடங்கப்பட்டு கட்டி முடிக்கப்படும்.

21. அனகாபுத்தூரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கப்படும்.

22. கவுல்பஜார் ஊராட்சிக்கு அருகில் அடையாறில் உள்ள தரைப்பாலம் மேம்பாலமாக கட்டப்படும்.

23. மறைமலைநகரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

24. துரைப்பாக்கம் – பல்லாவரம் ரேடியல் சாலையில், மேடவாக்கம் சந்திப்பில் கோவிலம்பாக்கத்தில் மேம்பாலம் கட்டப்படும்.

25. வேளச்சேரி தாம்பரம் முக்கிய சாலையில், மேடவாக்கம் மவுண்ட் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

26. முடிச்சூர், பொழிச்சலூர் ஊராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

27. சென்னை மாநகராட்சிப் பகுதிகளாகத் தற்போது இணைக்கப்பட்டுள்ள திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர், மதுரவாயல் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளுக்குட்பட்ட ஊர்கள், சென்னை மாநகர பாதாளச் சாக்கடைத் திட்டத்திலும், குடிநீர்த் திட்டத்திலும் இணைக்கப்படும்.

28. மாங்காடு பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

29. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து மாங்காடு பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கப்படும்.

30. உத்திரமேரூர் ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படும்..

31. வண்டலூர் அருகே துணை நகரம் அமைக்கப்படும்.

32. பரனூர் தொழுநோயாளி மறுவாழ்வு மையம் சீரமைக்கப்படும்.

## கிருஷ்ணகிரி மாவட்டம்

1. கிருஷ்ணகிரியில் பழங்கள், காய்கறிகள் சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

2. ஒசூரில் வர்த்தக மையம் அமைக்கப்படும்.

3. ஒசூரில் உள்ள தொழிலாளர் நல மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

4. ஒசூரில் உள்வட்ட சாலை அமைக்கப்படும்.

5. 150 கிராம ஏரிகளுக்கு நீர் வரும் வகையில் கெலவரப்பள்ளி அணைக்கட்டுப் பாசனக் கால்வாய் நீட்டிக்கப்படும்.

6. சூளகிரி துறை ஏரிக்கு மருதண்ட கால்வாய் பகுதியிலிருந்து பாசன கால்வாய் அமைக்கப்படும்.

7. ஐவ்வாது மலையின் அடிவாரத்தில், சிங்காரப்பேட்டை அருகே ஓடும் கடப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டு, அந்தப் பகுதியில் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

8. சென்றாயன் மலைக்குக் கிழக்கே உள்ள பன்னீர்க் குட்டையில் தடுப்பணை கட்டி, நீரைத் தேக்கிப் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

9. கிருஷ்ணகிரி அணையிலிருந்து கிழக்குக் கால்வாய் வழியாக ஓரப்பம் ஏரி, மருதேபள்ளி ஏரி, மாதேபள்ளிஏரி, ஓதிக்குப்பம் ஏரி மற்றும் பருகூர் சுற்றுப்புறங்களில் உள்ள ஏரிகளில் நீர் நிரப்பி, விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

10. குந்துக்கோட்டை ஊராட்சியிலுள்ள பல குக்கிராம மக்களின் குடியிருப்புகளில், மீதம் உள்ளோருக்கும் பட்டா வழங்க ஆவன செய்யப்படும்.

11. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தற்போது 10 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் தண்ணீர் 5 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.

12. கிருஷ்ணகிரி – ஒசூர் – திருப்பத்தூர் வழியாக ரயில் பாதை ஏற்படுத்தித் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

13. கிருஷ்ணகிரி – அவதானப்பட்டி படகு இல்லப் பூங்காவை (Boat House Park) விரிவுப்படுத்தி, குழந்தைகள் ரயில் (Children Train) வசதி செய்து தரப்படும்.

14. ஒசூர் அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தித் தரப்படும்.

15. தொழில்நகரமான ஒசூரில் தொழிலாளர் நல அலுவலகம் (Labour Welfare Office) தொழிலாளர் வைப்பு நிதி அலுவலகம் (PF Office), ஆகியன ஏற்படுத்தப்படும்.

16. ஒசூரில் டைடல்பார்க் ஏற்படுத்தித் தரப்படும்.

17. தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும்.

18. போச்சம்பள்ளியில் இயங்கி வந்த பருத்தி அரவை ஆலையும், சூரியகாந்தி எண்ணெய் ஆலையும் மீண்டும் செயல்பட ஆவன செய்யப்படும்.

19. போச்சம்பள்ளி சிப்காட் வளாகத்திலேயே கிரானைட் கற்கள் வர்த்தக ஏற்றுமதி மற்றும் பொருளாதார மண்டலம் அரசு சார்பில் ஏற்படுத்தித் தரப்படும்.

20. ஒசூர் – ஜோலார்பேட்டை ரயில் வசதி செய்து தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

21. கிருஷ்ணகிரி பழையபேட்டையில் இயங்கும் உருது பெண்கள் பள்ளி உயர்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும்.

22. கிருஷ்ணகிரியில் இயங்கும் தௌலதாபாத் உருது நடுநிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி செய்து தரப்படும்.

23. கெலவரப்பள்ளி அணையிலிருந்து பைரமங்கலம் ஏரி மற்றும் காருகொண்டபள்ளி ஏரிகளுக்குத் தண்ணீர் வசதி செய்து தரப்படும்.

24. பூனப்பள்ளி கிராமத்தில் உள்ள கோழிப்பண்ணையால் சுற்றுச் சூழல் பாதிப்பும் மக்களுக்குச் சுகாதாரக் கேடும் ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

25. கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழில் வளாகத்திற்குக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படும்.

26. கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தரப்படும்.

27. ஒசூரில் தனியாக ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28. ஒசூரில் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி வளாகம் அமைத்துத் தரப்படும்.

29. கெலவரப்பள்ளி அணைத் தண்ணீர் ஒசூர் ராம்நாயக்கன் ஏரியில் நிரப்பப்பட்டு ஒசூர் நகருக்குத் தண்ணீர் வசதி செய்து தரப்படும்.

30. தென்பெண்ணையாற்று உபரிநீர் நாகமங்கலம் லட்சுமி நாராயணராயலு ஏரி மூலமாக விவசாயத்திற்குப் பயன்பட வசதி செய்து தரப்படும்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

1. ஆனை மலை, நல்லாறு நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. வால்பாறைப் பகுதி மழைநீர் கேரளாவிற்குச் சென்று வருவதைத் தடுத்து, தமிழகத்திற்கு அதிகமாகப் பயன்படும் வகையில் இடைமலை நீர்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படும். இதனால் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் அதிகமாக நீர்ப் பாசன வசதி பெறும்.

3. திருப்பூர், ஈரோடு விவசாயிகளுக்கு அதிகப் பயன்தரும் மேல் அமராவதி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றி மேலும் 50 ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற ஆவன செய்யப்படும்.

4. பொள்ளாச்சியில் தென்னை நல வாரியம் அமைக்கப்படும்.

5. ஊட்டிக்கு காரமடை, பில்லூர், மஞ்சூர் வழியாக மாற்றுப் பாதை அமைக்கப்படும்.

6. கோவை மதுக்கரையில் இருந்து துடியலூர் வரை 120 அடி அகலப் புறவழிச்சாலைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. கோவை மாவட்டம் பொள்ளாச்சி நகருக்குப் புறவழிச்சாலையும் பொள்ளாச்சி – கோவை, பொள்ளாச்சி – பழனி ஆகியவற்றிற்கு நான்கு வழிச் சாலைகளும் அமைக்கப்படும்.

8. கோவையில் சிறு – குறு பம்ப்செட் உற்பத்தியாளர்கள் புதிதாக ISI முத்திரை வாங்குவதற்காகவும், வருடாந்திரப் புதுப்பித்தலுக்காகவும் "பம்ப்செட் பரிசோதனைக் கூடம்" ஒன்று அமைக்கப்படும்.

9. பொள்ளாச்சியில் தொழிற்பயிற்சி மையம் (ஐ.டி.ஐ) தொடங்கப்படும்.

10. பொள்ளாச்சியில் மகளிர் செவிலியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்படும்.

11. பொள்ளாச்சியில் வாகன நிறுத்தம் உட்பட 2500 சதுர மீட்டர் உள்ள கட்டிடங்களுக்குக் கட்டிட அனுமதி கோவையிலுள்ள திட்டக்குழு அலுவலகத்திலேயே பெறுவதற்கு வகை செய்யப்படும்.

12. பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த தென்னைப் பொருள்கள் உற்பத்தி வளாகம் அமைக்கப்படும்.

13. பவானி – நொய்யலாறு – அமராவதியாறு – உப்பாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. கோவையில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

15. காந்திபுரம் – உக்கடம் ஆகிய இடங்களிலும் மேலும் உள்ள முக்கிய சந்திப்புகளிலும் மேம்பாலங்கள் கட்டப்படும்.

16. கோவையில் சித்ரா முதல் உப்பிலிபாளையம், ஒண்டிபுதூர் முதல் சுங்கம் வரையிலும் துரித சாலைத் (Express Way )திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

17. நீலாம்பூர் மேட்டுப்பாளையம் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

18. வால்பாறை சுற்றுலா தலமாக அறிவிக்கப்படும்.

19. சூலூர் குளத்திலிருந்து மழைக்காலங்களில் வெளியேறும் உபரி நீரைப் புள்ளிப்பாளையம் நீர்வழிப்பாதையில் திருப்பிவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

20. காண்டூர் கால்வாய்த் திட்டப் பணிகள் முழுமையாக நிறைவேறத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு காண்டூர் கால்வாய்ப் பணிகள் நிறைவு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

21. வளர்ந்து வரும் கோவை நகரில் கூடுதலாகத் தகவல் தொழில்நுட்பப் பூங்காகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22. பில்லூர் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

23. வெள்ளளூர் குப்பைக் கிடங்கு பிரச்சினை உரிய முறையில் தீர்க்கப்படும்.

24. கழக ஆட்சியில் சென்ற முறை செய்ததுபோல் கட்டிட வரன்முறைத் திட்டம் கொண்டுவரப்படும்.

25. கோவைக் குற்றாலம் சுற்றுலாத் தலமாக வசதிகள் மேம்படுத்தப்படும்.

26. நொய்யலாறு ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, ஆற்று நீரைக் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்படத் தகுந்த திட்டங்கள் உருவாக்கப்பட்டு கோவையைச் சுற்றியுள்ள 11 நீர் நிலைகள் நிரப்பப்படும். (சித்திரவாடி, கிருஷ்ணாம்பதி, நரசாம்பதி, போரூர் குளம், செல்வ சிந்தாமணி குளம், உக்கடம், பெரிய குளம், குறிச்சி குளம், செங்குளம், சிங்காநல்லூர் குளம், சூலூர் குளம்).

27. மேட்டுப்பாளையத்தில் வாழை ஆராய்ச்சி மையம் தொடங்கப்படும்.

28. தொண்டாமுத்தூர் பகுதி திராட்சை விவசாயிகள் பயன்பெறும் வகையில் திராட்சை குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

29. கோவையில் மேற்குப் புறவழிச் சாலை அமைக்கப்படும்.

## சிவகங்கை மாவட்டம்

1. மானாமதுரை வைகை ஆற்றின் குறுக்கே கன்னார் தெரு கிருஷ்ணராஜபுரத்தில் மேம்பாலம் அமைக்கப்படும்.

2. காரைக்குடி – மதுரை நெடுஞ்சாலை நான்கு வழிச்சாலையாக மாற்றி அமைக்கப்படும்.

3. சிவகங்கை அருகே மிளகாய் வற்றல், வெந்தயம் போன்ற பொருட்களுக்கான விற்பனைப் பூங்கா மத்திய அரசால் தொடங்கப்பட்டு, தற்போது செயல்படாத நிலையில் உள்ளதை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4. காரைக்குடி அருகில் கோவிலூரில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கெமிக்கல்ஸிலிருந்து வெளிவரும் ரசாயனக் கழிவு நீரைச் சுத்திகரித்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மானாமதுரை வட்டத்தில் 16 கிராம விவசாயிகள் பயன்பாட்டிற்கென தொடங்கப்பட்ட நாட்டார் கால்வாய்த் திட்டம் தற்போது செயல்படாமல் உள்ளது. அத்திட்டத்தை மீண்டும் புதுப்பித்துச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து 16 கிராமக் கண்மாய்கள் நீர்ப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்யப்படும்.

## சென்னை மாவட்டம்

1. அண்ணா நகர் அரசுப் பொது மருத்துவமனை விரிவுபடுத்தப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டு, கட்டுமான வசதிகள் செய்து தரப்பட்டு தரம் உயர்த்தப்படும்

2. தியாகராய நகர் பகுதியில் நவீன அடுக்குமாடி கார் நிறுத்தும் இடம் அமைக்கப்படும்.

3. அம்பத்தூர் சி.டி.எச் சாலையில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம் LC 6 சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற முயற்சி மேற்கொள்ளப்படும்.

4. மணலி நகரம் முழுமைக்கும் பாதுகாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட (மெட்ரோ குடிநீர்) குடிநீர் இணைப்பு அனைத்து இல்லங்களுக்கும் வழங்க வகை செய்யப்படும்.

5. சென்னை மாநகரில் பல்வேறு வட்டங்களில் இளைஞர்களுக்காக விளையாட்டுத் திடலும், பயிற்சி மையங்களும் அமைக்கப்படும்.

6. சென்னை புளியந்தோப்பு பகுதியில் 20 ஏக்கர் நிலத்தில் ஆடு, மாடு இறைச்சிக் கூடம் அமைக்கும் பணி தி.மு.க ஆட்சி காலத்தில் துவங்கப்பட்டு, தற்போதைய அ.தி.மு.க அரசால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைந்து முடிக்கப்படும்.

7. கொளத்தூர் தொகுதியில் வண்ண மீன் பண்ணைகளின் வளர்ச்சி விரிவாக்கத்திற்காகத் தேவையான வசதிகள் செய்து தரப்படும். மேலும், வண்ணமீன் ஆராய்ச்சி மற்றும் ஏற்றுமதி மையமும் ஏற்படுத்தித் தரப்படும்.

8. சென்னை நகரில் உள்ள அரசுப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும்.

9. அம்பத்தூர், முகப்பேர் பகுதி மக்களுக்கு மின் மயான வசதி செய்து தரப்படும்.

10. அண்ணா நகர், அரும்பாக்கம், அம்பேத்கர் நகர் பகுதிகளில் அரசுப் பொது இடத்தில் வாழும் மக்களுக்குப் பட்டா தொடர்பான பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும்.

11. சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும்.

12. சென்னையில் பழுதடைந்துள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் புதுப்பித்துத் தரப்படும்.

13. சென்னையில் உள்ள சலவைத் துறைகளில் நவீன தொழில் நுட்ப வசதிகள் செய்துதரப்படும்.

14. கொளத்தூர், கொடுங்கையூர், பெரம்பூர் போன்ற பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

15. பெரியார் நகரில் அமைந்துள்ள புறநகர் மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

## சேலம் மாவட்டம்

1. ஓமலூர் ஒன்றியம் பொட்னேரி ஏரிக்குக் காவிரி ஆற்றிலிருந்து கூடுதலாக வரும் தண்ணீரை நீரேற்றம் செய்து, ஓமலூர் வட்டத்தில் உள்ள 20 ஏரிகளுக்கு நீர்ப் பாசன வசதி செய்து தரப்படும்.

2. தொப்பையாறு பகுதியில் நீரேற்றம் செய்து மேச்சேரி ஏரி, ராயப்பன் ஏரி, மானத்தால் ஏரி, அமரகுந்தி, பெரியேரிப்பட்டி, கருக்குப்பட்டி, ரெட்டிப்பட்டி, அம்மன் கோவில்பட்டி, காடம்பட்டி, புதூர் காடம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி, மாரமங்கலத்துப்பட்டி, தாரமங்கலம், பவளத்தானூர் ஆகிய ஏரிகள் நிரப்பப்படும்.

3. மேட்டூர் தொகுதியில் மின் நகர் – புதுச்சாம்பள்ளியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

4. காவிரி ஆற்று உபரி நீர் 16 கண் பாலம் அருகிலிருந்து எடப்பாடி வட்டம் பக்கநாடு, ஆடையூர், இருப்பாளி வழியாகக் கால்வாய் மூலம் சரபங்கா ஆற்றில் விடப்பட்டு எடப்பாடி, சங்ககிரி தொகுதிகளில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும்.

5. மேட்டூரில் உள்ள அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியாகும் நீர் நங்கவள்ளி, வனவாசி, குப்பம்பட்டி, ஜலகண்டபுரம் பகுதிகளில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும்.

6. வனவாசி, தானாதியூர், மூலக்காடு வழியாக மேட்டூர் அனல்மின் நிலையத்திற்குத் தரமான சாலை அமைக்கப்படும்.

7. எருமாபாளையத்தில் உள்ள சாயநீர்ப் பொது சுத்திகரிப்பு ஆலை செயல்பாட்டிற்கு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

8. சங்ககிரி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும்.

9. சங்ககிரி பேரூராட்சியில் புள்ள கவுண்டம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்படும்.

10. சங்ககிரியில் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தரப்படும்.

11. முந்தைய கழக ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டு, தற்போது அ.தி.மு.க அரசால் பயன்படுத்தப்படாமல் உள்ள சங்ககிரி பேருந்து நிலையம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. ஓமலூர் – மேச்சேரி பிரிவு சாலை , தொளசம்பட்டி , பெரமச்சூர் , ஆனக்கவுண்டம்பட்டி , மாங்குப்பை ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

13. சங்ககிரி வட்டம் எர்ணாபுரம், தப்பக்குட்டை, புதூர், கூடலூர் ஆகிய கிராமங்களில் நத்தம் புறம்போக்கு நிலங்களில், வசித்து வருபவர்களுக்கு இலவசப் பட்டா வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

14. கொங்கணாபுரம் ஒன்றியத்தில் வேளாண் பொருட்கள் விற்பனை மையம் அமைக்கப்படும்.

15. வீரபாண்டி தொகுதி, பனைமரத்துப்பட்டி ஒன்றியம் கெஜ்ஜல்நாயக்கன்பட்டி ஊராட்சி, ராஜாராம் காலனி தோப்புப் புறம்போக்கில் வாழ்ந்துவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்குப் பட்டா வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

16. பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் சிவன் கோவிலில் இருந்து, முருகன் கோவில் வழியாக வசிஷ்ட நதி குறுக்கே பாலம் அமைக்கப்படும்.

17. சேலம் லீபஜார் மற்றும் செவ்வாய்ப்பேட்டையில் ரயில்வே மேம்பாலப் பணி துரிதப்படுத்தப்படும்.

18. கழக ஆட்சியில் சேலத்தில் துவக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டுள்ள தகவல் தொழில் நுட்பப் பூங்காப் பணிகள் முழுமையாக முடிக்கப்படும்.

19. ஆத்தூர் தொகுதியில் ராமநாயக்கன் பாளையம் கல்ராயன் மலைஅடிவரத்தில் கல்லாறு நீர்த் தேக்கம் அமைக்கப்படும்.

20. தலைவாசல் காய்கறி தினசரி சந்தைக்குத் தேவையான இடவசதியும் குளிர்பதனக் கிடங்கு வசதியும் செய்து தரப்படும்.

21. சங்ககிரி – குப்பனூர் புறவழிச் சந்திப்பில் மேம்பாலம் அமைத்துத் தரப்படும்.

22. சேலத்தில் உள் விளையாட்டுத் திடல்களுடன் கூடிய விளையாட்டு அரங்கம் அமைத்துத் தரப்படும்.

23. முந்தைய கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க அரசால் கிடப்பில் போடப்பட்டுள்ள ஆத்தூர் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தரப்படும்.

24. கச்சிரப்பாளையம் அணையின் உபரிநீர் விவசாயத்திற்காக அதிகம் பயன்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

25. தமிழ்நாடு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களைக் கொண்டு மீன் பிடிப்பு மற்றும் விற்பனைப் பணியை மீண்டும் தொடர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26. மேச்சேரியில் தக்காளி ஜுஸ் தொழிற்சாலை அமைக்கப்படும்.

27. சங்ககிரியில் அனைத்து வசதிகளுடன் கூடிய லாரி நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

28. காக்காப்பாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி அருகே தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைத்துத்தரக் கோரும் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

29. சேலத்தில் ஜவுளிப் பூங்கா (Textile Park) அமைக்கப்படும்.

## தஞ்சாவூர் மாவட்டம்

1. பேராவூரணியில் நீதிமன்றம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

2. பட்டுக்கோட்டையில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

3. பட்டுக்கோட்டை அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

4. மாயனூர் புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய் மற்றும் உய்யக்கொண்டான் விரிவாக்கக் கால்வாய் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5. பட்டுக்கோட்டையில் தொடங்கப்பட்ட வணிக வளாகம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. கல்லணைக் கால்வாய், காவிரி ஆறு, வெண்ணாறு மறு சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

7. பட்டுக்கோட்டை வட்டம் வேப்பங்குளத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் முழுநேர விவசாயிகள் பயிற்சி மையம் தொடங்கப்படும்.

8. பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் வர்ஜின் ஆயில் ஆலை தொடங்கப்படும்.

9. பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் தேங்காய் எண்ணெய் அரவை ஆலை அமைக்கப்படும்.

10. பேராவூரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பட்டுக்கோட்டையும் சேர்க்கப்படும்.

11. அதிராம்பட்டினத்தில் உப்பு சார்ந்த காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைக்கப்படும்.

12. தஞ்சையில் கோளரங்கத்துடன் கூடிய அறிவியல் மையம் அமைக்கப்படும்.

13. மதுக்கூர் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும்.

14. பட்டுக்கோட்டை வட்டம் கண்ணனாறு வடிகால் – வடவாறு நீட்டுவாய்க்கால் நீரேற்றுப் பாசனத் திட்டம் (Lift Irrigation Project) நிறைவேற்றப்படும்.

15. சேதுபாவாசத்திரத்தில் இறால் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

16. மராட்டியர் காலத்தில் கட்டப்பட்ட மனோரா சீரமைக்கப்பட்டு, சுற்றுலா தலமாக அறிவிக்கப்படும்.

17. சேதுபாவாசத்திரத்தில் மீன் பிடி உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

18. தஞ்சாவூரில் இயற்கை வேளாண்மை மையம் அமைக்கப்படும்.

19. சோளகம்பட்டி, அயனாபுரம் ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

20. மல்லிப்பட்டிணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்.

21. கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி செய்து தரப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

22. கும்பகோணம் அருகில் அண்ணலக்ரகாரம் – மாத்தி இரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைக்கப்படும்.

23. பாபநாசத்தில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

24. உத்தமதானபுரத்திலுள்ள தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவு இல்லம் புதுப்பிக்கப்பட்டு, காப்பாளர் நியமிக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

25. தஞ்சை மாவட்டத்தில் உள்ள சுமார் 350க்கும் மேற்பட்ட ஏரிகள் தூர்வாரப்படும்.

## தருமபுரி மாவட்டம்

1. பாலக்காடு வட்டம் காரிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட தும்பல அள்ளி அணைக்கு – தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே – என்னேகொள்புதூர் என்ற இடத்தில் அமைய உள்ள புறக்கால்வாய்த் திட்டம் மீண்டும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. மொரப்பூர் பகுதியில் பால் குளிரூட்டு நிலையம் அமைக்கப்படும்.

3. தருமபுரி – அரூர் சாலை மொரப்பூர் வழியாக நான்கு வழிச்சாலை அமைக்கப்படும்.

4. தென்பெண்ணையாற்றில் சென்னாக்கல் என்னுமிடத்தில் தடுப் அணை அமைத்து உபரிநீர் வரும் காலங்களில் ஏரிகளில் நிரப்பி நீர்ப் பாசன வசதி அதிகரிக்கப்படும்.

5. தருமபுரி மாவட்டத்திலுள்ள கலை அறிவியல் கல்லூரிகளில் புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்படும்.

6. கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து ஏரிகளுக்குத் தண்ணீர் செல்லக் கால்வாய் அமைத்துத் தரப்படும்.

7. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை தரம் உயர்த்தப்பட்டு பணியாளர்களின் நலன் பாதுகாக்கப்படும்.

8. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரைஆலையில் உள்ள துணைமின் நிலையத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

9. ஒகேனக்கல் நீர் மின் திட்டம் கொண்டு வரப்படும்.

10. சின்னாறு அணையில் உபரி நீர் பாலக்கோடு வட்டம் ஜெர்த்தலாவ் வாய்க்காலிலிருந்து புலிக்கரை ஏரி வரை உள்ள 16 ஏரிகளை நிரப்பி பாசன வசதி விரிவுபடுத்தப்படும்.

11. சின்னாற்றில் கட்டப்பட்டுள்ள பங்களா அணைக்கட்டிலிருந்து வெளியேறும் உபரிநீரை, சின்னாற்றின் குறுக்கே, மாரண்டஅள்ளி அணைக்கட்டை போன்று, மேலும் ஒரு தடுப்பணையை உரிய இடத்தில் கட்டி செங்கன்பசவந்தலாவ் ஏரிக்குச் செல்லும் கால்வாயுடன் சேர்த்து பாலக்கோடு , தருமபுரி, பெண்ணாகரம் வட்டங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட பெரிய மற்றும் சிறிய ஏரிகளில் நிரப்பி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதுடன் பாசன வசதியும் மேம்படுத்தப்படும்.

12. கழக ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்ட பெண்ணாகரம் தாலுகா மருத்துவமனைக்குப் போதிய உள்கட்டமைப்பு வசதிகளும், சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளும், நவீன மருத்துவ வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

13. பாலக்கோட்டில் பெண்கள் கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்படும்.

14. பாலக்கோட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

15. வத்தல்மலை நகரில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

16. தொங்கனூரில் பொதியன்பள்ளம் அணை தூர்வாரப்படும்.

17. கோட்டப்பட்டியிலுள்ள சின்ன அம்மன் ஏரி, பெரிய அம்மன் ஏரி ஆகியன தூர்வாரப்படும்.

18. வாணியாறு அணை நீர்த் தேக்கத்திற்கு இடதுபுற கால்வாய் நீட்டிப்பு செய்து தரப்படும்.

19. பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் உள்ள ஏரிகள் தூர்வாரப்படும்.

20. பாப்பாரப்பட்டி பேரூராட்சியில், செயல்படாத நிலையில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட்டு; மீண்டும் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

21. தருமபுரி நகரில் உள்ள பேருந்து நிலையம் தரம் உயர்த்தப்படும்.

## திண்டுக்கல் மாவட்டம்.

1. ஒட்டன்சத்திரம் புறவழிச்சாலைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. குடகனாற்றின் குறுக்கே லட்சுமணப்பட்டியில் அணைகட்டி வேடசந்தூரில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நீர்ப் பாசன வசதி செய்து தரப்படும்.

3. பழனி மண்டலம் வரதமாநதி நீர்ப் பாசனத் திட்டம் மேம்படுத்தப்படும்.

4. ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குத் தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. ஒட்டன்சத்திரம் பழனி இடையே சத்திரப்பட்டி, ஆயக்குடி, தாழையூத்து ஆகிய இடங்களில் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

6. ஒட்டன்சத்திரம் பாச்சலூர் வழி கொடைக்கானல் செல்லும் சாலை தரம் உயர்த்தப்படும்.

7. வேடசந்தூரில் நீர் வரத்து வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வாரப்படும்.

8. வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய பகுதிகள் பயன்பெறும் வகையில் குடகனாற்றில் பெரிய அணை கட்டப்படும்.

9. காவிரிக் கூட்டு குடிநீர் 54 கிராம பஞ்சாயத்துகளுக்கும் 5 பேரூராட்சிகளுக்கும் முழுமையாகக் கிடைக்க வழி செய்யப்படும்.

10. வேடசந்தூர் தொகுதியில் அனைத்து ஊர்களிலும் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும்.

11. பழனி தொகுதியில் பச்சையாறு அணை அமைக்க நடவடிக்கை எடுத்து பழனி, தொப்பம்பட்டி ஒன்றிய பகுதிகள் பயன்பெற வாய்க்கால்கள் அமைக்கப்படும்.

12. பழனி வையாபுரிகுளம், சிறுநாயக்கன்குளம் ஆகிய கண்மாய்கள் தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, பாசன வசதி மேம்படுத்தப்படும்.

13. பழனி – ஆயக்குடியில் பழங்கள் சேமித்து வைக்கும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

14. பழனியையும் கொடைக்கானலையும் இணைக்க மாற்றுப்பாதைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

15. கொடைக்கானல் மக்களின் குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க குண்டாறு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

16. வடமதுரை பகுதியில், புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட முடிமலையில் பெரிய அணைகட்டி அதனைச் சுற்றியுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி செய்து தரப்படும்.

17. வடமதுரை இரயில் நிலையம் தொடர்ந்து செயல்பட மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

18. வடமதுரை புறவழிச்சாலையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

19. வடமதுரை மற்றும் அய்யலூரில் பாதாள சாக்கடை அமைக்கப்படும்.

20. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழனிபாலாறு – பொருந்தலாறு இடது பிரதானக் கால்வாய் சீரமைக்கப்பட்டு சிலாப் லையனிங் செய்து மடைகள் அனைத்தும் செப்பனிடப்பட்டு பாசன வசதி செய்து தரப்படும்.

21. ஒட்டன்சத்திரம் தொகுதி வடகாடு ஊராட்சிப் பகுதியில் உள்ள பரப்பலாறு அணை மற்றும் குளங்கள் தூர்வாரப்பட்டு பாசன வசதி மேம்படுத்தப்படும்.

22. நிலக்கோட்டை வட்டம் எழுவனம்பட்டி பகுதியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய மஞ்சலாறு அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

23. நிலக்கோட்டை அரசுப் பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

24. சின்னாளப்பட்டியில் சாயப்பட்டறை கழிவுகளைச் சுத்திகரிக்க, சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். மேலும் ஜவுளிப் பூங்காவும் உருவாக்கப்படும்.

25. பழனியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படும்.

26. திண்டுக்கல், ஒட்டன் சத்திரம், ஆயக்குடி, வத்தலகுண்டு ஆகிய இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும்.

27. காவிரி குடிநீர்த் திட்டம் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன் சத்திரம், தொப்பம் பட்டி ஒன்றியங்கள், வேடசந்தூர் தொகுதி ஆகியவற்றிற்கு விரிவாக்கம் செய்யப்படும்.

28. நத்தத்தில் பழங்கள், காய்கறிகள் சேமித்து வைக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

29. ஒட்டன்சத்திரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களைச் சேர்த்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

1. தொட்டியம் ஒன்றியம் காட்டுப்புத்தூரில் வாழை பதப்படுத்தும் கிடங்கு அமைக்கப்படும்.

2. திருச்சி நவல்பட்டில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்பப் பூங்காவைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

3. திருச்சி புத்தூரில் இருந்து சோமரசம்பேட்டைக்குச் செல்லும் சாலை அகலப்படுத்தப்படும்.

4. திருச்சி நகரின் மையப்பகுதியில் நெருக்கடிக்கு இடையில் உள்ள காந்தி சந்தையை வேறு ஒரு வசதியான இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

5. திருச்சி பால்பண்ணை முதல் துவாக்குடி வரை அணுகுசாலை (Service Road) அமைக்கப்படும்

6. திருச்சியில் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் குறித்துப் பரிசீலனை செய்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்காக அரசு, பெல் நிறுவனம் , சிறு தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு, நிலைக்குழு அமைக்கப்படும்.

7. மணப்பாறையில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

8. மண்ணச்சநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும்.

9. மண்ணச்சநல்லூரில் நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

10. துறையூரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

11. உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

12. உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் நெல் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கப்படும்.

13. துறையூர் அரசுப் பொது மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதிகள் செய்து தரப்படும்.

14. திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலை துவாக்குடி சுங்கவரி சாலையிலிருந்து வாழவந்தான் கோட்டை – சர்க்கார் பாளையம் வழியாக திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலைக்குச் சுற்றுச் சாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

15. தொட்டியத்தில் வாழை வணிக வளாகம் அமைக்கப்படும்.

16. அன்பில் நகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

17. திருச்சி – துறையூர் நெடுஞ்சாலையில் உள்ள மண்ணச்சநல்லூருக்கு புறவழிச்சாலை அமைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

18. திருச்சி நகரில் மலர் சந்தை அமைக்கப்படும்.

## திருநெல்வேலி மாவட்டம்

1. நீர் ஆதாரங்களில் உள்ள நீரைத் தனியார் குளிர்பான நிறுவனங்கள் பயன்படுத்துவது மாற்றப்பட்டு, விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. திசையன்விளை பகுதிக்குத் தாமிரபரணி தண்ணீர் கொண்டுவரப்படும்.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் சேர்வலாறு – ஜம்புநதி நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படும்.

4. இராமாநதி மேல்மட்டக்கால்வாய் மற்றும் இரட்டைக்குளம் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

5. மணிமுத்தாறு – தெற்கு மெயின் ரீச் கால்வாய் – திருக்குறுங்குடி நம்பியாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. ஆலங்குளத்தில் தாலுகா நீதிமன்றம் அமைக்கப்படும்.

7. குமரி மாவட்டம் பழையாற்றிலிருந்து, கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரைச் சுசீந்திரம் அருகே மின் நீரேற்றும் நிலையம் அமைத்துக் குழாய் மூலம் ராதாபுரம் கால்வாய்க்குக் கொண்டுவரும் திட்டம் நிறைவேற்றப்படும்.

8. பாபநாசத்தில் புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

9. குலவணிகபுரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும்.

10. கன்னடியன் கால்வாய் அணையில் கோதையாறு, காருகுறிச்சி, சேரன்மாதேவி, பத்தமடை ஆகிய நான்கு கதவணைகளும் சரி செய்யப்பட்டுப் பராமரிக்கப்படும்.

11. அம்பாசமுத்திரம் – பாபநாசம் ஆகிய இரு கால்வாய்களும் கான்கிரீட் லைனிங் செய்து சீர்செய்யப்படும்.

12. அம்பாசமுத்திரம் புறவழிச்சாலைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

13. கடையநல்லூர் வட்டம் சொக்கம்பட்டி கிராமம் புன்னையாபுரம் கால்வாயில் பாலம் அமைக்கப்படும்.

14. இராமாநதி, கடனாநதி நேரடி பாசனக் கால்வாய்கள் அனைத்தும் லையனிங் செய்தும், தூர்வாரியும் பராமரிக்கப்படும்.

15. கடையநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

16. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தீப்பெட்டிகளுக்கு தற்போது மத்திய அரசு தரும் 7 சதவிகித ஊக்கத்தொகை 15 சதவிகிதமாக உயர்த்தித் தர முயற்சி செய்யப்படும்.

17. கூடங்குளம் அணுமின் நிலையம், மகேந்திரகிரி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில், படித்த உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18. இராதாபுரம் – பணகுடி புறவழிச்சாலையில் இரண்டு மேம்பாலங்கள் கட்டப்படும்.

19. தென்காசி மற்றும் அம்பாசமுத்திரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் அமைக்கப்படும்.

20. அம்பாசமுத்திரத்தில் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.

21. திருநெல்வேலி – செங்கோட்டை நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி துரிதப்படுத்தப்படும்.

22. சிவகிரி – செண்பகவல்லி அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

23. குண்டாறு அணை உயர்த்தப்பட்டு அதிக அளவில் நீரைத் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

24. தென்காசி மற்றும் சங்கரன்கோவிலில் உள்ள அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.

25. தென்காசி பகுதியில் பீடித் தொழிலாளர்கள் உரிய மருத்துவ வசதிகள் பெறுவதற்கு இ.எஸ்.ஐ மருத்துவமனை அமைத்துத் தரப்படும்.

26. மணிமுத்தாறு அணையில் இருந்து செல்லும் அனைத்துக் கால்வாய்களும் தூர்வாரப்படும்.

27. திருநெல்வேலி – கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

28. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மாத ஊதியம் நிர்ணயம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## திருவண்ணாமலை மாவட்டம்

1. சாத்தனூர் அணையிலிருந்து போளூருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. கலசப்பாக்கம் தொகுதியில் படவேடு அருகில் உள்ள செண்பகத் தோப்பு அணை சீரமைக்கப்பட்டுப் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

3. ஜவ்வாதுமலை பழங்குடிமக்கள் நல வாரியம் மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

4. திருவண்ணாமலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

5. திருவண்ணாமலை – திண்டிவனம் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. பெரணமல்லூரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

7. பெரணமல்லூரில் மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும்.

8. கலசப்பாக்கம் ஒன்றியத்தில் கடலாடி, கீழ்பாலூர், சிங்காரவாடி, மேல்பாலூர், மட்டவெட்டு, கீழ்குப்பம் ஆகிய கிராமங்களில் குடிநீர் பஞ்சத்தைப் போக்கும் வகையில் சாத்தனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

9. ஜவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

10. திருவண்ணாமலையில் பட்டு, சரிகை உற்பத்தி செய்யும் ஆலை தொடங்கப்படும்.

11. நந்தன் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

12. திருவண்ணாமலையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

13. சாத்தனூர் அணை மேம்படுத்தப்பட்டுத் தூர்வாரப்படும்.

14. போக்குவரத்து வசதி மேம்பட திண்டிவனம் – வேட்டவலம் சாலையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

15. திருவண்ணாமலையில் உள்ள அரசுப் பொதுமருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு நவீனப்படுத்தப்படும்.

16. சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு ரயில் வசதிகள் செய்து தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

17. திண்டிவனம் – கிருஷ்ணகிரி வரை நான்கு வழிச்சாலை அமைக்கப்படும்.

18. திருவண்ணாமலையில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

19. திருவண்ணாமலை – சென்னை சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

20. கலசப்பாக்கம் அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும்.

21. முந்தைய கழக ஆட்சியில் துவங்கப்பட்டு அ.தி.மு.க ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ள தென்பெண்ணையாற்றையும் செய்யாற்றையும் இணைக்கும் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

22. திருவண்ணாமலையில் உள்ள டான்காப் எண்ணெய் தொழிற்சாலை மீண்டும் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## திருப்பூர் மாவட்டம்

1. காங்கேயத்தில் சுற்றுச் சாலை அமைக்கப்படும்.

2. காங்கேயத்தில் அரசு மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி செய்து தரம் உயர்த்தப்படும்.

3. பவானி சாகர் அணையிலிருந்து LBP வாய்க்காலுக்கு கடை மடை வரை தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. திருப்பூரில் பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களுக்குத் தனித்தனியாகத் தங்கும் விடுதிகள் கட்டித்தரப்படும்.

5. திருப்பூர் அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

6. காங்கேயம் தொகுதி நாகமநாயக்கன்பட்டி – உத்தமபாளையம் வட்டமலைக்கரை அணைக்குப் பரம்பிகுளம் ஆழியாறு உபரி நீரையும் அமராவதி ஆற்றின் உபரி நீரையும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

7. திருப்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித்தரப்படும்

8. உடுமலைப்பேட்டையில் காய்கறிப் பொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

9. பரம்பிக்குளம் – ஆழியாறு வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வாரப்படும்.

10. திண்டுக்கல் முதல் கோவை வரை உள்ள இரு வழிச்சாலை நான்கு வழிச்சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

11. தாராபுரத்தில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் திருமூர்த்தி அணை கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

12. தாராபுரம் அரசுப் பொது மருத்தவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி செய்து தரம் உயர்த்தப்படும்.

13. திருப்பூர் மாநகரத்தில் மகளிர் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.

14. பல்லடத்தில் கறிக்கோழி ஆராய்ச்சி மையம் தொடங்கப்படும்.

15. திருப்பூரில் தென் மாவட்டம் செல்லும் பேருந்துகளுக்கு வசதியாக ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

16. திருப்பூரில் ஒருங்கிணைந்த உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.

17. திருப்பூரில் ESI மருத்துவமனை கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

18. திருப்பூரில் சுற்றுச் சாலை மற்றும் பறக்கும் உயர்மட்ட சாலை அமைக்கப்படும்.

19. திருப்பூரில் பின்னலாடை ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

20. நொய்யல் – உப்பாறு திட்டம் நிறைவேற்றப்படும்.

21. வெள்ளக்கோவில் மற்றும் பல்லடம் சுற்றுச் சாலை அமைக்கப்படும்.

22. அமராவதி ஆற்றில் தடுப்பணைகள் கட்டப்படும்.

## திருவள்ளூர் மாவட்டம்

1. பூவிருந்தவல்லியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.
2. பூவிருந்தவல்லி சாலை குமணன் சாவடியிலிருந்து குறுக்கு வழிச்சாலை வரை மேம்பாலம் அமைக்கப்படும்.
3. பூவிருந்தவல்லி ஒன்றியம் கூடபாக்கம் ஊராட்சி கலெக்டர் நகர் பகுதியில் வாழும் மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.
4. பூவிருந்தவல்லி ஒன்றியம் சென்னீர்குப்பம் ஊராட்சி குமரன்நகர், செல்வகணபதி நகர், லீலாவதி நகர், ஜெ.ஜெ நகர் பகுதிகளில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.
5. திருவேற்காடு நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.
6. திருவேற்காடு பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்படும்.
7. பெங்களூரு நெடுஞ்சாலை NH 4 நசரத்பேட்டை கூட்டுரோட்டில் மேம்பாலம் அமைக்கப்படும்.
8. சென்னை – பெங்களூரு நெடுஞ்சாலையில் திருமழிசையில் மேம்பாலம் அமைக்கப்படும்
9. திருவாலங்காடு இரயில் நிலையம் அருகே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
10. சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைக்கப்படும்.
11. செங்குன்றம் புறவழிச்சாலையில் வடகரை சந்திப்பு , சோத்துபாக்கம் சாலை சந்திப்பு ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைக்கப்படும்.

12. நத்தம்மேடு ஊராட்சி அண்ணா நகர் பகுதியில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

13. திருநின்றவூரில் பாதாள சாக்கடை அமைக்கப்படும்.

14. ஆரணி ஆற்றின் குறுக்கே ஊத்துக்கோட்டையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

15. பொன்னேரியில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

16. பொன்னேரி, மீஞ்சூர், ஆரணி ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கப்படும்.

17. மீஞ்சூர் பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

18. பொன்னேரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும்.

19. திருத்தணி நகரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

20. திருத்தணி அரசுப் பொது மருத்துவமனை 24 மணிநேர அவசர சிகிச்சைப் பிரிவுடன் தரம் உயர்த்தப்படும்.

21. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மீஞ்சூர் – பொன்னேரி அருகே வெளிவட்டச் சாலை அமைக்கப்படும்.

22. செங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையம் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

23. செங்குன்றம் புறவழிச்சாலை NH 5 மாதவரம் நெடுஞ்சாலை சேருமிடத்தில் மேம்பாலம் அமைக்கப்படும்.

24. புழல் ஒன்றியத்தில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

25. வில்லிவாக்கம் ஒன்றியம் அயப்பாக்கம் அருகிலிலுள்ள அஞ்சுகம் நகர் காயிதே மில்லத் நகர் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

26. மீஞ்சூர் இரயில்வே கேட்டில் ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்.

27. பொன்னேரி வட்டம் பூங்குலம் ஊராட்சி அருகில் சிரவக் கால்வாயில் பாலம் அமைக்கப்படும்.

28. பழவேற்காடு பசியாவரம் இடையே மேம்பாலம் அமைக்கப்படும்.

29. திருத்தணி கீழ் பஜாரில் அரசு மருத்துவமனைக்குச் செல்ல ரயில்வே மேம்பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30. பொன்னேரி பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டப்படும்.

## திருவாரூர் மாவட்டம்.

1. திருவாரூரில் இயற்கை உரத்தொழிற்சாலை தொடங்கப்படும்.

2. திருவாரூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்கப்படும்.

3. திருவாரூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

4. கொரடாச்சேரி ஒன்றியம் மணக்கால் அய்யம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

5. கொரடாச்சேரி ஒன்றியம் கீரங்குடி ஊராட்சியில் சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படும்.

6. முத்துப்பேட்டை சுற்றுலா தலமாக அறிவிக்கப்படும்.

7. குடிக்கணி பகுதியில் வாழும் குத்தகை சாகுபடியாளர்களின் பட்டா சம்மந்தப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

8. திருவாரூர் மாவட்டத்தில் முக்கிய நகரங்களில் உள்ள மயானங்களில் எரிவாயு தகன மேடை அல்லது மின்மயானம் அமைத்துத் தரப்படும்.

9. ஓடம்போக்கி ஆறு தூர்வாரப்படும்.

10. நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஏரிகள், குளங்கள் தூர்வாரப்படும்.

11. வெள்ளையாற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படும்.

12. திருவாரூரில் தீயணைப்பு நிலையம் நவீனப்படுத்தப்பட்டு அதன் சேவைகள் மேம்படுத்தப்படும்.

13. திருத்துறைப்பூண்டியில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

14. திருவாரூரில் அரசு இசைக் கல்லூரி தொடங்கப்படும்.

## தூத்துக்குடி மாவட்டம்

1. தூத்துக்குடியில் சரக்கு உந்துகள் நிறுத்துவதற்குத் தனி முனையம் ஏற்படுத்தித் தரப்படும்.

2. திருவைகுண்டத்திற்கும் ஆத்தூருக்கும் இடையே தாமிரபரணியில் தகுதியான இடத்தில் ஒரு அணை கட்டப்படும்.

3. விளாத்திகுளம் தொகுதியில் குளிர்பதன வசதியுடன் கூடிய மிளகாய் வத்தல் குடோன் அமைக்கப்படும்.

4. காயல்பட்டினம் மற்றும் கோவில்பட்டி நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி நதியில் உள்ள வடகால் தென்கால், மருது மேலக்கால், கீழக்கால் வாய்க்காலில் உள்ள 53 குளங்களையும் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும்.

6. கோவில்பட்டி நகரில் இரண்டாவது குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

7. கோவில்பட்டி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

## தேனி மாவட்டம்

1. வைகை அணை தூர்வாரப்படும்.

2. பெரியகுளம் கும்பக்கரை அருவிக்கு மேல் பாம்பாற்றின் குறுக்கே வவ்வால் துறை அணை கட்டப்படும்.

3. தேனியில் வேளாண் பொருள் குளிரூட்டு நிலையங்கள் அமைக்கப்படும்.

4. ஆண்டிபட்டி – தெப்பம்பட்டி – திப்பரேவு அணைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. ஆண்டிப்பட்டியில் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கும் வைகை உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்கா மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. தேவாரம் – சாக்குலூத்துமெட்டு; கோம்பை – ராமகல்மெட்டு; குரங்கனி – டாப்ஸ்டேஷ்ன்; கடமலை – மயிலை – முத்தாளம்பாறை – மல்லப்புரம் – கல்லுப்பட்டி சாலை; கடமலை –மயிலை – காமராஜபுரம் – கிழவன்கோவில் சாலை; திண்டுக்கல் – குமுளி நான்கு வழிச்சாலை; தேனி – விருதுநகர் இணைப்புச் சாலை ஆகிய சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பல கிராமங்களில் நிலத்தடி நீராதாரம் வற்றிவிட்டதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையை மீட்டு விவசாயத்தை மேம்படுத்தவும், முல்லைப் பெரியாறு ஆற்றுப் பாசன பயன்பட்டை அதிகப்படுத்தவும், தொட்டமாந்துறையிலிருந்தும் சின்னமனூர்

ஒன்றியத்திலுள்ள பரமத்தேவன் பட்டியிலிருந்து ஓடைப்பட்டி வரை புதிதாகக் கால்வாய் அமைத்து, அப்பகுதியில் நீர்ப் பாசன வசதி மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. கம்பம் அரசுப் பொது மருத்துவமனையில் இரத்த வங்கி அவசர சிகிச்சை மருத்துவப் பிரிவு, காசநோய்ப் பிரிவு ஆகிய பிரிவுகள் தொடங்கப்படும்

9. கம்பத்தில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

10. முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு மத்திய தொழிலகப் படையை CISF நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. முல்லைப் பெரியாறு அணையிலுள்ள பேபி அணையை வலுப்படுத்திடவும், அப்பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. போடி நகரைச் சுற்றிப் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

13. லோயர் கேம்ப் வரை வெட்டப்பட்டுள்ள 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை, போடி கொட்டக்குடி ஆற்றுடன் இணைத்துத் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

14. அய்யம்பாளையம் பகுதியில் தென்னை விவசாயிகள் நலன்காக்க கொப்பரைத் தேங்காய் மார்க்கெட் அமைத்துத் தரப்படும்.

15. முந்தைய கழக ஆட்சியில் கோம்பை, சிறிய கோம்பையை இணைக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அ.தி.மு.க ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## நாகப்பட்டினம் மாவட்டம்

1. நாகப்பட்டினத்தில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

2. நாகூர் சுற்றுலா தலமாக அறிவிக்கப்பட்டு அங்குள்ள உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

3. நாகப்பட்டினம் மேலக்கோட்டை வாசலில் புதிய பாலம் கட்டப்படும்.

4. வேதாரண்யத்தில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைக்கப்படும்.

5. வேதாரண்யத்தில் பழங்களைச் சேமித்து வைக்கக் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும்.

6. நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

7. பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம் புதுப்பிக்கப்பட்டுச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படும்.

8. மயிலாடுதுறையில் புறவழிச் சாலை அமைக்கப்படும்.

9. நாகப்பட்டினம் அக்கரைப் பேட்டையில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

10. மயிலாடுதுறையில் காய்கனிகள் பாதுகாப்பிற்காகக் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்கப்படும்.

## நாமக்கல் மாவட்டம்

1. திருச்செங்கோடு தொகுதி, பரமத்தி வேலூர் தொகுதிமக்கள் பயன் அடையும் வகையில் காவிரி ஆறு – மணிமுத்தாறு நதிநீர் இணைப்புத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. திருச்செங்கோடு அருகில் உள்ள காந்தி ஆசிரமம் சீரமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

3. திருச்செங்கோடு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

4. காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், வாழவந்திகோம்பை ஆகிய பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கொல்லிமலை அடிவாரம் காரவள்ளியில் மழைநீர் சேகரிப்புக் குளம் அமைக்கப்படும்.

5. இராசிபுரம் நகரைச் சுற்றிப் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

6. மோகனூர் வாய்க்கால், ராஜவாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால் பாசனத் திட்டம் முழுவதும் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பரமத்தி வேலூரில் செயல்பட்டு வந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

8. குமார பாளையம், பள்ளிப்பாளையம் சாயப்பட்டறைகளுக்கு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

9. நன்செய் இடையாறு அருகில் கூடுதுறையில் கதவணை கட்டும் திட்டம் விரைந்து முடிக்கப்படும்.

10. நாமக்கல்லில் முட்டைகள் சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

11. நாமக்கல் நகரைச் சுற்றிப் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

12. காவேரி உபரிநீர் சேலம் மாவட்டம் வழியாக திருமணிமுத்தாறு இணைப்பு, மல்ல சமுத்திரம் ஒன்றியம், புதுச்சத்திரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஒன்றியம் வழியாகத் திருச்சி மாவட்டம் காவேரியில் இணைக்கப்படும்.

13. நாமக்கல் முதல் திருச்சி வரை நான்கு வழிச் சாலை அமைக்கப்படும்.

14. நாமக்கல் நகரம், மோகனூர் பேரூர் இரண்டுக்கும் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## நீலகிரி மாவட்டம்

1. நீலகிரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.

2. தேயிலை விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கும் சிறப்புத் திட்டம் நீலகீரி மாவட்ட அனைத்து சிறு தேயிலை விவசாயிகளுக்கும் கிடைக்க ஆவன செய்யப்படும்.

3. சேரம்பாடி அரசு தேயிலைக் கோட்டத்தில் அமைந்துள்ள கோட்ட மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தமிழ்நாடு தேயிலைக் கோட்டக் கழகத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது பற்றி பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. கூடலூர் அரசு மருத்துவமனை நவீனப்படுத்தப்படும்.

## புதுக்கோட்டை மாவட்டம்

1. புதுக்கோட்டை தொகுதியில் குண்டாறு, வெள்ளாறு இரண்டையும் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.
2. காவிரி உபரி நீரைப் புதுக்கோட்டையில் ஓடும் அக்கினி ஆற்றில் விடுவதன் மூலம் பாசன வசதி அதிகரிக்கப்படும்.
3. புதுக்கோட்டையில் காய்கறிகள், பழங்கள் சேமித்து வைக்க குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு அமைக்கப்படும்.
4. அறந்தாங்கியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.
5. புதுக்கோட்டை நகரின் புறவழிச்சாலை அருகே புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்படும்.
6. அறந்தாங்கி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.
7. திருமயம் தொகுதி விவசாயிகள் பயன்பெறத் தக்க வகையில் காவிரி, கொள்ளிடம் உபரி நீர் மாயனூர் – மருங்காபுரி – மறவமதுரை – கவிநாடு கண்மாய்க்குக் கொண்டுவரும் திட்டம் செயல்படுத்தப்படும்.
8. பொன்னமராவதி மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.
9. விராலிமலை ஆரம்ப சுகாதார நிலையம் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.
10. ஆலங்குடியில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
11. கோட்டைப்பட்டினத்தில் கடல் உணவு பதப்படுத்தும் கிடங்கு அமைக்கப்படும்.
12. திருவரங்குளம் ஒன்றியம் வல்லத்திராக்கோட்டை பழப் பண்ணை மீண்டும் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பெரம்பலூர் மாவட்டம்

1. கை களத்தூர் ஏரி தூர்வாரப்பட்டு விவசாயத்திற்கும் குடிநீருக்கும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

2. கை களத்தூரில் நூலகம் கட்டப்படும்.

3. பெரம்பலூர் திருச்சி நெடுஞ்சாலை சிறுவாச்சூரில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. பெரம்பலூரில் கூடுதல் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. பெரம்பலூர் நகருக்குக் கொள்ளிடம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, பெரம்பலூர் நகர் மக்களின் குடிநீர்த் தேவை நிறைவு செய்யப்படும்.

6. பெரம்பலூர் மாவட்டம் எரையூரில் உள்ள நேரு சர்க்கரை ஆலையில் இரண்டாம் அலகு மீண்டும் செயல்படவும், இணை மின் உற்பத்தி செய்யும் திட்டம் நிறைவேற்றப்படவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பெரம்பலூரில் முந்தைய கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் மீண்டும் செயல்படத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. பெரம்பலூர் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் எல்லைப்பகுதியில் அவசர விபத்து சிகிச்சை மையம் ( Trauma Care Center) தொடங்கப்படும்.

9. லெப்பைக் குடிகாடு மற்றும் பெரம்பலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

10. லெப்பைக் குடிகாடு பேரூராட்சியில் அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

11. முந்தைய கழக ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டப்பட்டு அ.தி.மு.க அரசால் கிடப்பில் போடப்பட்டுள்ள குன்னம் மருத்துவக் கல்லூரி பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

12. பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பூலாம்பாடி பேரூராட்சியில் கலிங்க ஓடை நீர்த் தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படும்.

13. பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி மலையாளப்பட்டி சின்ன முட்டு நீர்த் தேக்க அணைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

14. 1956 ஆம் ஆண்டில் நெய்வேலி நிலக்கரித் திட்டம் தொடங்கப்பட்ட நேரத்தில் மாற்று நிலமாக வழங்கப்பட்ட புதுக்கரைப்பேட்டை, விஜயமாநகரம் ஆகிய பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. ஏறத்தாழ 3291 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கும் 568 ஏக்கர் தரிசு நிலத்திற்கும் பட்டா வழங்கப்பட வேண்டும். கழக ஆட்சி காலத்தில் இந்த நிலங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. அதனடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## மதுரை மாவட்டம்

1. மதுரை மாநகர் மையத்தில் உள்ள வெங்காய மண்டி, பழக்கடை மண்டி ஆகியன புறநகரில் அமைக்கப்படும்.

2. மதுரை காளவாசல் பகுதியில் மேம்பாலம் அமைக்கப்படும்.

3. மதுரையில் புறவழிச்சுற்றுச் சாலை அமைக்கப்படும்.

4. மதுரை நகர் – ஜெய்கிந்துபுரம் இஸ்லாமியர்களின் வசதிக்காக வில்லாபுரம் கண்மாய்ப் பகுதியில் 411–11 என்ற சர்வே எண்ணில் காலியாக உள்ள வீட்டுவசதி வாரியத்தின் பொறுப்பிலுள்ள பயனற்ற மேட்டுப்பாங்கான பகுதியில் கபர்ஸ்தான் (அடக்கஸ்தலம்) அமைப்பதற்கு இடம் ஒதுக்கித் தரப் பரீசிலிக்கப்படும்.

5. மதுரை நகரில் பெரியார் பேருந்து நிலையம் அருகிலும், கோரிப்பாளையம் தேவர் சிலை அருகிலும் பறக்கும் மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

6. மதுரையில் பூக்கள் வைப்பதற்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

7. மதுரை – சந்தைப்பேட்டை நீரேற்றும் நிலையம் அருகில் சலவைத் தொழிலாளர்கள் பயன்பாட்டுக்கென்று ஆழ்துளைக் கிணற்றுடன் கூடிய சலவைக் கூடம் அமைக்கப்படும்.

8. பெரியார் பாசனத் திட்டம் கொட்டாம்பட்டி வரை விரிவுபடுத்தப்படும்.

9. சேடப்பட்டி – டோராபாறை நீர்தேக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

10. உசிலம்பட்டி பகுதியில் வறண்ட 58 கிராமங்களுக்குப் பாசனவசதி அளிப்பதற்காக முந்தைய தி.மு.கழக ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமங்களுக்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தும் வகையில் 58 ஆம் கால்வாய் திட்டம் மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

11. உசிலம்பட்டியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படும்.

12. உசிலம்பட்டியில் மகளிர் மேல்நிலைப்பள்ளி தொடங்கப்படும்.

13. உசிலம்பட்டியில் மதுரை – தேனி சாலையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

14. வாடிப்பட்டி வட்டம் சிறுமலை தென்பகுதியிலுள்ள 35 க்கு மேற்பட்ட கிராமங்களில் முல்லைப் பெரியாறு பிரதான கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து சாத்தையார் அணையுடன் இணைத்துப் பாசன வசதியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

15. வாடிப்பட்டியில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளை கதர் வாரியம் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

16. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் அருகே அறிவிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

17. மதுரை – பண்டியராஜபுரம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மீண்டும் தொடங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

18. 1920 ஏப்ரல் 3ல் ஆங்கிலேயக் காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட போராளிகளின் நினைவாகப் பெருங்காமநல்லூர் கிராமத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும்.

19. சோழவந்தானில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும்.

20. சோழவந்தானில் பழங்கள் , காய்கறிகள் , பூக்கள் சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

21. சோழவந்தான் அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு 24 மணிநேரமும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

22. அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மீண்டும் மின் உற்பத்தித் திட்டம் தொடங்கப்படும்.

23. மதுரை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாடக்குளம் கண்மாயில் நிரந்தர நீர்த் தேக்கம் அமைக்கப்படும்.

24. மதுரை கிழக்கு தொகுதியில் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள ஆனையூர், திருப்பாலை, கண்ணனேந்தல், நாகனாகுளம், வண்டியூர், உத்தங்குடி ஆகியவற்றில் உள்ள 11 வார்டுகளிலும் பாதாள சாக்கடை அமைக்கப்படும்.

25. திருமங்கலத்தில் பாதாள சாக்கடை மற்றும் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

26. வண்டியூர் மாரியம்மன் தெப்பக் குளத்தில் எந்நாளும் நீர் நிறைந்து இருக்க ஏற்பாடு செய்யப்படும். முன்பு போல் மைய மண்டபத்திற்குச் சென்று வர படகுகள் விடப்படும்.

27. மதுரை வடக்குத் தொகுதி வண்டியூர் கண்மாய் ஆண்டு முழுவதும் நீர் நிரப்பி படகுகள் விடப்பட்டுச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படும்.

28. நாகணாகுளம் கண்மாய் தூர்வாரப்பட்டு, அதன் கரை முழுவதும் நடைபாதையும் பூங்காவும் அமைக்கப்பட்டு, முன்பு போல் மிதிபடகுகள் விடப்படும்.

29. வைகைப் பாலம் அருகே உள்ள பழமையான செல்லூர் கண்மாய் தூர்வாரப்பட்டு, நீர் நிறைந்திருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

30. மதுரை மாநகரில் தி.மு.கழக ஆட்சியில் வைகை ஆற்றங்கரை இரண்டிலும் போடப்பட்ட சாலைகள் முழுவதுமாக முடிக்கப்படாமல் போக்குவரத்திற்கு முழுமையாகப் பயன்படுத்த இயலாமல் உள்ளது, அவ்விரண்டு சாலைகளும் மதுரை மாநகர் எல்லை முழுவதும் மேம்படுத்தப்பட்டு மேலும் விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

31. மதுரை சுப்பிரமணியபுரம் ரயில்வே பாதையின் கீழ் சுரங்கப் பாதை அமைக்கப்படும்.

32. மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் உள்ள அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியை உயர் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## விருதுநகர் மாவட்டம்

1. விருதுநகர் மாவட்டத்தில் நிலையூர் – கம்பிக்குடி, சென்னம்பட்டி கால்வாய்த் திட்டங்கள் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.
2. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 1600 கிராமங்களுக்குத் தாமிரபரணி தண்ணீர் சரியான முறையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.
3. திருவில்லிபுத்தூர் – அழகர் அணைத் திட்டம் செயல்படுத்தப்படும்.
4. காரியாப்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.
5. காரியாப்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்படும்.
6. விருதுநகரில் லாரி பேட்டை அமைத்து அனைத்து லாரிகளும் நிற்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.
7. பாத்திரங்கள் உற்பத்தி வரி விதிப்பு அளவு 10 இலட்சம் ரூபாய் என்பது 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
8. திருச்சுழி காணல் ஓடை தூர்வாரப்படும்.
9. திருச்சுழி – நரிக்குடி பகுதியில் அரசுக் கலைக்கல்லூரி அமைக்கப்படும்.
10. திருமங்கலம் இராஜபாளையம் தென்காசி வழியாக செங்கோட்டைக்கு நான்கு வழிச்சாலையாக அமைக்கப்படும்.
11. கல்லூரணி – திருச்சுழி; கல்லூரணி – மீனாட்சிபுரம்: கல்லூரணி – ஆலப்பட்டி; கல்லூரணி – மேலகண்டமங்கலம் சாலை வசதிகள் மேம்படுத்தப்படும்.

12. இராஜபாளையத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகள் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

13. இராஜபாளையம் வடக்கு தேவதானம் பெரிய குளம் கண்மாய் பாசனப் பகுதிகளிலுள்ள வாய்க்கால்கள் சிமெண்ட் கான்கீரிட் போட்டுச் சரிசெய்யப்படும்.

14. கன்னியா மதகு தடுப்பணை சீர்செய்யப்படும்.

15. தெற்காறு, குண்டாறு பாசன வசதித் திட்டம் நிறைவேற்றப்படும்.

16. இராஜபாளையம் – சத்திரப்பட்டி PACR சாலையில் உள்ள இரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைக்கப்படும்.

17. திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் நகரங்களில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

18. இராஜபாளையம் நகராட்சியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

19. அருப்புக்கோட்டையில் சாயப்பட்டறை வளாகம் அமைக்கப்படும்.

## விழுப்புரம் மாவட்டம்

1. திருக்கோயிலூர் – விழுப்புரம் சாலையில் அணுகுச் சாலை அமைத்துத் தரப்படும்.

2. கள்ளக்குறிச்சி – சங்கராபுரம் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

3. திருநாவலூர் ஒன்றியம் ஆத்தூர் பகுதியில் உள்ள புத்த நந்தல் அணையைப் புதுப்பித்துப் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

4. தென் பெண்ணையாறு, கெடிலம் நதி ஆகிய இரண்டையும் இணைத்து அப்பகுதியில் பாசன வசதியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வராக நதிக் கால்வாயைச் செஞ்சிப் பகுதியில் ஓடும் சங்கராபரணி தொண்டையாற்றில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. பனமலை ஊராட்சி இசா ஏரிக்கு வரும் நீர் வரத்தான நந்தன் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படும்.

7. கள்ளக்குறிச்சி அரசுப் பொது மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.

8. கல்வராயன் மலை சுற்றுலா தலமாக அறிவிக்கப்படும்.

9. கானை ஊராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்குவதற்காகத் தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

10. விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11. விழுப்புரம் திருவண்ணாமலை சாலையில் விழுப்புரம் சென்னை புறவழிச்சாலையின் குறுக்கே அயினம்பாளைம் அருகே மேம்பாலம் அமைக்கப்படும்.

12. வாக்கூர் வி.மாத்தூர் வாதானூர் மூங்கில்பட்டு ஏரிகளுக்கு நீரைக் கொண்டு வரும் வாதானூரன் தலைமைக்கால்வாய் செப்பனிடப்பட்டு சிமெண்ட் வாய்க்காலாக அமைக்கப்படும்.

13. மரக்காணத்தில் மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்படும்.

14. விழுப்புரம் மாவட்டம் கூட்டுரோட்டிற்கு வடக்கே என்.எச். 45 ரோட்டை கடக்கும் மலட்டாற்றில் மேற்குப் பக்கம் தற்காலிகமாக மணலால் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவரை அகற்றிவிட்டுப் புதிதாகக் கான்கீரிட் சுவர்கள் அமைக்கப்படும்.

15. தென்பெண்ணையாற்றில் அமைந்துள்ள திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து கூரானுர் கிராமம் வரை மலட்டாற்றின் குறுக்கே 5 இடங்களில் போடப்பட்டுள்ள பைப் பாலங்களை அகற்றி விட்டுப் புதிதாகக் கான்கீரிட் பாலங்கள் அமைக்கப்படும்.

16. முந்தைய கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு தற்போதைய அதிமுக அரசால் முடக்கப்பட்டுள்ள (சிப்காட்) தொழிற்பேட்டை மீண்டும் திண்டிவனம் நகரில் தொடங்கப்படும்.

17. ராகவன் வாய்க்கால் தூர்வாரப்படும்.

18. உளுந்தூர் பேட்டை வட்டத்திலுள்ள செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நவீனப்படுத்தபட்டு இந்த ஆலை தொடர்பான விவசாயிகளின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

19. திண்டிவனத்தில் உள்ள அரசுப் பேருந்து நிலையம் மற்றும் அரசுப் பொது மருத்துவமனை தரம் உயர்த்தித் தரப்படும்.

20. மட்டப்பாறையில் உள்ள ஆற்றில் தடுப்பணை கட்டிப் பாப்பக்கால் ஒடையில் இணைத்து பரிகம் ஏரி, ஆலத்தூர் ஏரி மூலம் பாசன வசதிகள் மேம்படுத்தப்படும்.

21. வீடுர் அணையை ஆழப்படுத்தி நீர் கொள்ளளவு அதிகப்படுத்தப்படும்.

22. தகடி முதல் திருக்கோவிலூர் வரை செல்லும் சாலையில் உள்ள முடியனூர் ஒடையில் முன்புள்ள தரைப்பாலம் மாற்றப்பட்டு, உயர்மட்ட பாலம் அமைத்துத் தரப்படும்.

23. விழுப்புரம் மாவட்டம் நீர் ஆதாரத்தைப் பெருக்க தென்பெண்ணை – மலட்டாற்றை இணைக்கவும் ஆற்றின் தடுப்பணைகள் அமைக்கவும், வாய்க்கால்களைச் சீர் செய்யவும் முயற்சி செய்யப்படும்.

24. சங்கராபுரம் தாலுகாவில் கொடியனூரில் உள்ள நீர் விழ்ச்சியின் தண்ணீர் வீணாகாமல் தடுக்க புதிய அணை கட்டப்பட்டு நீர்ப் பாசன வசதி மேம்படுத்தப்படும்.

25. முந்தைய தி.மு.க ஆட்சியில் கள்ளக்குறிச்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு அ.தி.மு.க ஆட்சியில் பணி நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டி முடிக்கப்படும்.

26. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழமை வாய்ந்த “செஞ்சிக் கோட்டை” சுற்றுலா தலமாக அறிவிக்கப்படும்.

27. வராகநதி அணை செல்லும் வழியில் செவலபுரை அருகில் தரைப்பாலத்தையும், செஞ்சி மேல்களவாய் சாலையில் உள்ள தரைப்பாலத்தையும் மேம்பாலமாக்கி, சுற்றியுள்ள 50 கிராமங்கள் பயனடைய வழிவகை செய்யப்படும்.

28. கூட்டேரிப்பட்டு புறவழிச்சாலையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

29. விழுப்புரம் நகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள கிராமப் பகுதிகளுக்கும் சிமெண்ட் சாலை வசதி செய்து தரப்படும்.

## வேலூர் மாவட்டம்

1. திருப்பத்தூர் நகரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

2. திருப்பத்தூரில் விவசாய விளைபொருட்களைச் சேமித்து வைக்கக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

3. கிருஷ்ணகிரியில் உள்ள படேதால் ஏரியிலிருந்து கால்வாய் வெட்டி வெலக்கல் நத்தம் செட்டேரியில் தண்ணீர் நிரப்பப்படும்.

4. சோளிங்கர் அருள்மிகு லெட்சுமி நரசிம்மர் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் வசதிக்காக ரோப் கார் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வேலூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

6. வேலூர் மாநகரின் வெளியே சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

7. வேலூர் மாநகரில் நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

8. வேலூர் சி.எம்.சி மருத்துவமனை ஆற்காடு சாலையிலும், காட்பாடி சாலையிலும், வெங்கடேஸ்வரா பள்ளி அருகிலும் சுரங்கப் பாதைகள் அமைக்கப்படும்.

9. வேலூரில் தோல் தொழிற்சாலைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.

10. வேலூர் அரசு மருத்துவமனையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் தொடங்கப்படும்.

11. அரியூர் கூட்டுறவு நூற்பாலை மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. பேரணாம்பட்டு அருகே பத்தரபல்லி ஊராட்சியில் முந்தைய கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, தற்போது நிறுத்தப்பட்டுள்ள மலட்டாற்றில் அணைகட்டும் பணி மீண்டும் தொடங்கப்படும்.

13. இஸ்லாமிய மக்கள் அதிகம் உள்ள பேரணாம்பட்டில் உருது பள்ளிக்கூடம் அமைக்கப்படும்.

14. வாணியம்பாடி புதுநகரில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

15. வாணியம்பாடியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

16. வாணியம்பாடி – தெக்குப்பட்டில் மூடிக்கிடக்கும் சந்தன ஆலை திறக்கப்பட்டு மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

17. ஜோலார்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்று நோய் மையம் தொடங்கப்படும்.

18. ஆம்பூரில் சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

19. ஆவாரம்குப்பம் திம்மம்பேட்டை இடையே பாலாற்றில் மேம்பாலம் அமைக்கப்படும்.

20. ஆலங்காயம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

21. வேலூரில் தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் திட்டம் நிறைவேற்றப்படும்.

22. அணைக்கட்டு தொகுதியில் சாத்தனூர் அணையிலிருந்து ஒடுகத்தூர் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

23. குடியாத்தம் நகரில் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

❖ ❖ ❖

**சொல்வதைச் செய்வோம்!**

**செய்வதைச் சொல்வோம்!**

**ஆதரிப்பீர் உதயசூரியன்!**

அச்சிட்டோர்: ராசி கிராபிக்ஸ் பி. லிமிடெட், சென்னை-14. வெளியீடு: தி.மு.க. தலைமைக் கழகம்